Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC. No. 400/2024
DEPOSITION OF ACCUSED SIDE WITNESS –1

| | | | |
|---|---|---|---|
| Name: | தர்மலிங்கம் | Calling: | LIC முகவர் |
| Father's Name: | கந்தசாமி | Religion: | |
| Village: | பெரியபேட்டை | Age: | 52 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 13.03.2026 நேரம் : 03.15 PM

(எதிரி ஆஜர்)

எ.த.சா.1 முதன்மை விசாரணை

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து ராஜ்குமார் பூபதி என்பவரிடம் சீட்டு கட்டி விவரம்குறித்து கேட்டு அழைப்பாணை வந்தது. புகார்தாரர் எனக்கு மாமா உறவு முறை ஆவார். எதிரி ராஜ்குமார் எனக்கு நண்பர் ஆவார். கடந்த 2015 ம் வருடம் ராஜ்குமார் கேட்டுக்கொண்டதினால் பூபதி என்பவரிடம் சீட்டுகட்டுவதற்காக சேர்த்திவிட்டேன். அந்த சீட்டு தொகையையும் கட்டிவிட்டார், அதற்கான தொகையையும் முழுவதுமாக வாங்கிக்கொண்டார். புகார்தாரருக்கும் எதிரிக்கும் இதற்குமுன் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரிதான். நான் தான் அவரை சேர்த்திவிட்டேன். 2015 ம் வருடம் புகார்தாரர் மத்திய அரசு இரயில்வே ஊழியராக இருந்தார். புகார்தாரர் நடத்துவதற்கு உரிமம் பெற்றாரா என்றால் அதுக்குறித்து எதுவும் தெரியாது. அவர் சீட்டு கட்டும் போது கொரானா காலக்கட்டம் எதுவும் இல்லை. சீட்டுக்கட்டும் போது கையொப்பம் இடாமல் பிணையமாக எதிரி புகார்தாரரிடம் கொடுத்த காசோலையை வைத்து புகார்தாரும் நான் அவருக்கு உறவினர் என்ற முறையில் என்னிடம் கொடுத்து என் மூலமும் ஒரு வழக்கு தாக்கல்

செய்துள்ளோம் என்றால் இல்லை. புகார்தாரர் சீட்டுக்கட்டுவதற்காக காசோலைகளை வாங்குவார் என்று சொன்னால் சரியல்ல. அது சம்மந்தமாக இதே நீதிமன்றத்தில் பல வழக்குகள் உள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் புகார்தாருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் அவர் கொடுத்துள்ள வழக்கு குறித்து தெரியும் என்றாலும் சரியல்ல, நான் அறிமுகபடுத்தும்போதே என் மாமா என்றுதான் அறிமுகம் செய்துள்ளேன், அதனால் எதிரி என்னை இந்த வழக்கில் அவர் தரப்பு சாட்சியாக சேர்த்திருக்ககூடாது. புகார்தாரரிடம் சீட்டுக்காக கொடுத்த காசோலையை வைத்து தவறாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் எதிரி புகார்தாரரிடம் கடன் வாங்கவில்லை என்றாலும் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

புகார்தாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜராகி குறுக்குவிசாரணை இல்லை என தெரிவித்ததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) தர்மலிங்கம்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K